**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.131/2021**
**DW2**

| | | |
|---|---|---|
| **Name** | : | பிரியா |
| **Husband's Name** | : | கார்த்திகேயன் |
| **Village** | : | மங்கலம் |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.10.2025.
A1 to 3 present.

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரிகள் மூவரையும் எனக்கு தெரியும். 1வது எதிரி என் கணவர். 2 எதிரி என் உடன் பிறந்த அக்கா. 3ம் எதிரி என் உடன் பிறந்த அண்ணன். எதிரிகள் மீது கொலை வழக்கு நடந்துவருகிறது. என் அக்காவின் கணவர் ரமேஷ் கொ்லை செய்யப்பட்டதாக வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ரமேஷ் என்று இறந்தார் என்று எனக்கு தெரியாது. 08.03.2017 அன்று மதியம் 3.00 மணிக்குதான் ரமேஷ் இறந்த விவரம் எனக்கு தெரியும். 08.03.2017 அன்று எதிரி கார்த்திகேயன் எங்கள் வீட்டில் என்னுடன் இருந்தார். அதற்கு முன்றைய தினமும் எங்கள் வீட்டில் என்னுடன்தான் இருந்தார். 07.03.2017 காலை முதல் 08.03.2017 மதியம் 2.00 மணி வரை கார்த்திகேயன் என்னுடன்தான் இருந்திருந்தார். இறந்த ரமேஷ் வாடகை வீட்டில் இருந்தார். 2வது எதிரி சரண்யா என் அம்மா வீட்டில் இருந்தார். ரமேஷ் இறப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன் இருந்து என் அக்கா என் அம்மா வீட்டில்தான் இருந்தார். ரமேசும் 2வது எதிரியும் ஏன் பிரிந்து விட்டார்கள் என்று கேட்டால் ரமேஷ் அடிக்கடி குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து அவர் மனைவியை அடித்தார். அதனால் அவர்கள் பிரிந்துவிட்டார்கள். ரமேசுக்கு குடிப்பழக்கமும், பெண்களிடம் அசிங்கமாக பேசும் பழக்கமும் இருந்தது. அதனால் ரமேஷ் வைத்திருந்த டெய்லர் கடையில் துணியை தைக்க கொடுத்த பெண்கள் என் வீட்டிற்கு வந்து தகராறு செய்துள்ளார்கள். சாட்சிகள் ரவி, மீனா, அமலா,பாஸ்கரன், பிச்சைக்காரன் ஆகியோருக்கும் எங்களுக்கும் உறவு எவ்வாறு இருந்தது என்று கேட்டால் ரமேஷ் இறப்பதற்கு முன்பே எங்களுங்களுக்கும் அவர்களுக்கும் முன்விரோதம் இருந்தது. நான் தண்ணிர் டேங்க் தெருவில் குடியிருக்கிறேன். ரமேஷ் தென்னைமரத்தெரு, குறுக்கு சந்தில் தயாளன் என்பவர் வீட்டில் குடியிருந்தார். என்

வீட்டில் இருந்து ரமேஷ் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்று கேட்டால் சாட்சி திறந்தவெளி நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற வாளாக கேட் வரை உள்ள தூரம் இருக்கும் என்று கூறுகிறார். அது சுமார் 150 மீ இருக்கும். எதிரிகள் கார்த்திகேயன், சரண்யா ஆகியோரிடையே எனக்கு தெரிந்து நல்ல உறவுதான் இருந்தது.

அரசு **<u>தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன என் அக்கா கணவர் ரமேசுக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் இல்லை. மனைதான் உள்ளது. ரமேசுக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றும் அந்த வீட்டில்தான் ஆரம்பகாலத்தில் ரமேசும் எதிரி சரண்யாவும் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் எதிரி சரண்யாவுடம் தவறான உறவில் இருந்தார் என்றும், அவர்கள் அந்த வீட்டில் இருந்தால் என் கணவருக்கும் 2 வது எதிரிக்கும் உள்ள தொடர்புக்கு இடையூறாக இருக்கும் என்பதால் தனி வாடகை வீட்டிற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அ.சா.2 மீனா ,ரமேஷின் அக்கா. மீனாவை அழைத்து 2வது எதிரி சரண்யாதான் ரமேஷ் இறந்து கிடப்பதை காண்பித்தார் என்று சொன்னால் சரியல்ல. ரமேஷின் உடலை 3 எதிரிகளும் அப்புறப்படுத்த முயற்சி செய்தபோது ஊர்மக்கள் அவர்களை தடுத்து சடலத்தை அந்த இடத்திலேயே வைக்கச்செய்தார்கள் என்றால் சரியல்ல. ரமேஷை என் கணவர், என் அக்கா மற்றும் என் அண்ணன் ஆகியோர் சேர்ந்து கொலை செய்தார்கள் என்றால் நான் மறுக்கிறேன். கொலை நடந்த அன்று இரவு என் அக்கா ரமேஷை கொலை செய்துவிடுவதாக மிரட்டினார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் ரமேஷ் வீட்டில் எதிரிகள் கார்த்திகேயன் மற்றும் ராஜசேகர் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் என் கணவர் , அக்கா, அண்ணனை காப்பாற்ற பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரமேஷ் என்பவரை கொலை செய்துவிட்டு உடலை எதிரிகள் அப்புறப்படுத்த முயன்றபோது ஊர்மக்கள் தடுத்து நிறுத்தினார்கள் என்றும், அதனால் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்த ரமேசுடன் என் அக்கா சரண்யா குடியிருந்ததால் ரமேஷ் இறப்பிற்கு முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அவருக்கு உடந்தையாக என் கணவர் மற்றும் அண்ணன் செயல்பட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்திற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பு ரமேஷ் எதிரி சரண்யாவை அடித்தது சம்மந்தமாக போலிசில் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை. இறந்த ரமேசுக்கு எந்த பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்றால் அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது. அந்த நபர்களையும் எனக்கு தெரியாது. ரமேஷ் துணி தைப்பது சம்மந்தமாக பெண் வாடிக்கையாளர்கள் என் அம்மா வீட்டிற்கு வந்து சண்டை போட்டுள்ளார்கள். அவ்வாறு சண்டை போட்ட நபர்கள் யார் என்றும் எனக்கு தெரியாது. நான் அங்கு இல்லை. ரமேசுக்கு குடிப்பழக்கம் இல்லாத

ஒழுக்கமானவர் என்றும் அவர் டெய்லர் தொழிலை ஒழுங்காக செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ரமேஷ் என் அக்காவின் கள்ளத்தொடர்பை பற்றி கேட்டதால் எதிரிகள் மூவரும் ரமேஷை கொலை செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் கணவர், அக்கா, அண்ணன் ஆகியோரை காப்பாற்ற நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும், என் சாட்சியத்தில் எந்த உண்மையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை போலிசார் கைது செய்து பின்னர் என் கணவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவர் கொலையை நடந்ததாக சொல்லும் நாளில் என்னுடன்தான் இருந்தார் என்று நான் யாரிடமாவது மனு கொடுத்துள்ளேனா என்றால் மங்களம் போலிசாருக்கு நான் மனு கொடுத்துள்ளேன். அதன் நகல் நான் வைத்துள்ளேன். நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.